
R.R.PICTURES.
அர்.அர். பிக்சர்ஸ்
வாழப்பிறந்தவள்
டைரெக்ஷன்: ராமண்ணா

# வாழப் பிறந்தவள் ?

டைரெக்ஷன் — ராமண்ணா

ஸ்டுடியோ - வாஹினி

ஆர். ஆர். பிக்சர்ஸ்
சென்னை-17.

# சிருஷ்டி கர்த்தாக்கள்

| | | |
|---|---|---|
| கதை | .... | ஸிம்ஹா |
| வசனம் | .... | விந்தன் |
| பாடல்கள் | .... | கவி. கா, மு. ஷெரீப் |
| சங்கீதம் | .... | S, ராஜேஸ்வர ராவ்<br>G, ராமநாதன் |
| ஒளிப்பதிவு | .... | M. A. ரெஹ்மான்<br>ராஜாபாதர் |
| ஒலிப்பதிவு | .... | A. கிருஷ்ணன், B. A.<br>மோகனசுந்தரம் |
| ஆர்ட் டைரெக்ஷன் | .... | கங்கா |
| நடன அமைப்பு | .... | B. ஹீராலால் |
| மேக் அப் | .... | ஹரிபாபு<br>கஜபதி<br>பீதாம்பரம்<br>கோபால்ராவ் |
| எடிட்டிங் | .... | M. S. மணி |
| உடை அலங்காரம் | .... | M. நடேசன்<br>கண்ணன் |
| புரொடக்ஷன் எக்ஸிகியூடிவ் | .... | K. G. விஜயரங்கம் |
| புரொடக்ஷன் மானேஜர் | .... | V. R. சந்துரு |
| பப்ளிஸிடி | .... | T. R. மாணிக்கவாசகம் |

விஜயா லாபரட்டரி

| | | |
|---|---|---|
| புராஸஸிங் | .... | A. தியாகராஜன் |

## உதவியாளர்கள்

| | |
|---|---|
| டைரெக்ஷன் .... | K. B. சீனிவாசன்<br>M. K. ராஜேந்திரன் |
| எடிடிங் .... | A. தங்கராஜ் |
| ஒளிப்பதிவு .... | M. K. ராஜு, L. C. & S.E.<br>மல்லி இரானி |
| ஒலிப்பதிவு .... | V. B. C. மேனன்<br>P. M. மதன கோபால் |
| செட்டிங்ஸ் .... | C. குப்புசாமி<br>K. சீனிவாசன் |
| சீன் ஜோடனை .... | R. முத்து<br>K. S. N. மூர்த்தி |
| மேக் அப் ... | S. G. ஜெயராமன் |

ஸ்டுடியோ — வாஹினி

டைரெக்ஷன் — ராமண்ணா

## நடிகர்கள்

திருமதி T. R. ராஜகுமாரி
,, B. S. சரோஜா
,, M. பண்டரிபாய்
,, M. M. ராதாபாய்
,, K. S. அங்கமுத்து
,, K. வரலட்சுமி
பேபி கிரிஜா

திரு. ஸ்ரீராம்
,, T. S. பாலையா
,, K. சாரங்கபாணி
,, K. துரைசாமி
,, R. பாலசுப்பிரமணியம்
,, சந்திரபாபு
,, E. R. சகாதேவன்
,, K. P. ஜெயராமன்
,, T. V. சேதுராமன்

## நடனம்

குசல குமாரி
குமாரி தங்கமணி
குமாரி லட்சுமி

## பின்னணி

M. L. வசந்த குமாரி
P. லீலா
ஜிக்கி
A. P. கோமளா
கான சரஸ்வதி
ரத்னமாலா

மோதி
பார்த்தசாரதி
நாகூர் E. M. ஹனிபா

# வாழப் பிறந்தவள் ?

**ஆம்,** உணராத சமூகத்துக்கு உணர்த்துகிறோம் - அவள் சாகப் பிறக்க வில்லை; வாழத்தான் பிறந்தாள்.

ஆனால் பெண்களைப் பஞ்சு மெத்தைகளாகக் கருதி, அடிக்கடி படுக்கையை மாற்றும் 'ஆண் வர்க்கம் அவளை வாழ விட்டதா? அந்த வர்க்கத்தை எதிர்த்து நின்று, அவளால் வெற்றி பெற முடிந்ததா ?— அதுதான் அபலை கீதாவின் கதை !

ஏன், நம் நாட்டுப் பெண்களின் கதையும் அதுதானே ?

* * *

**ஏட்டிலே** நடமாடும் சட்டம், நாட்டிலே நடமாடாத காரணத்தால் 'காதல்' ஒன்று சேர்த்து வைக்காத கீதாவையும் ராஜாவையும் 'கௌரவம்' ஒன்று சேர்த்து வைத்தது. அதற்கு அவர்கள் பெற்றோர் இட்ட பெயர் கல்யாணமாம், கல்யாணம் !

அதனால் விளையும் விபரீதங்களைத்தானே "விதியின் விளையாட்டு!" என்று வீணர்கள் சொல்கிறார்கள் ?

பாவம், கல்யாணம் பண்ணியும் கன்னியாக, கணவன் உயிருடன் இருந்தும் கைம்பெண்ணாகக் காலங் கழித்து வந்தாள் கீதா.

தன்னலம் மிக்க ஆண்களால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் அவளுக்கு அநீதிமேல் அநீதி இழைத்து வந்தன. அவற்றுக்கிடையே நீதியை விலை கொடுத்து வாங்க முடியாமல் கீதா கண்ணீர் விட்டாள்; கலங்கினாள்.

இந்த நிலையிலே, கடன் கொடுத்த கயவன் ஒருவன் தயாநிதி என்ற தகாத பெயரில் வந்து, அவளிடம் காதல் கீதம் பாடினான் அக்கம் பக்கத்திலிருந்த சிலர், அவன் பாட்டுக்குப் பக்க வாத்தியம்

வாசித்தனர். இந்த அபஸ்வரத்தைக் கேட்டுக் கீதா துடித்தாள்; துவண்டாள்.

அவள் தகப்பனுர் சதாசிவம், அதற்கு மேல் அவளுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை; ராஜாவின் அப்பாவான பொன்னுசாமியைத் தேடிச் சென்ருர். விஷயத்தை எடுத்துச் சொல்லி, அந்த வீணன் காலில் விழுந்தார். அவனே "ஏழைகள் வாழ்வது பணக்காரர்களுக்கு அவமானம்!" என்று இறுமாப்புடன் சொல்லி, அவரை எட்டி உதைத்துக் கொட்டும் மழையில் தள்ளிவிட்டான் — பாவி!

கிழவர் என்ன செய்வார்? — எமனின் உதவியை நாடித் தன் இன்னலைத் தீர்த்துக்கொண்டு விட்டார்.

அவரைப் பிரிந்த தாயும் மகளும் தரித்திரத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தனர்.

நிலைமையை உணர்ந்த தயாநிதி நெருக்கினுன்; கடனுக்குப் பதிலாக அவள் கற்பைச் சூறையாட விரும்பினுன். ஏழை கீதா என்ன செய்வாள்?—பிறந்த வீட்டை விட்டு, பெற்ற தாயை விட்டு, புகுந்த வீட்டைத் தேடி, புருஷன் தயவை நாடி ஓடினுள், ஓடினுள், அப்படி ஓடினுள்.

அங்கே பிச்சைக்காரியோடு பிச்சைக்காரியாக நின்ற அவளை, அந்த வீட்டு மருமகள் என்று இனந் தெரிந்து கொண்டவள் ஒரே ஒருத்திதான் — அவள்தான் நிர்மலா!

மலர்வதற்கு முன்னுல் மணமற்றுப்போன அவளை நோக்கி, "எங்கே மன்னி, என் கணவர்?" என்று ஆவலுடன் விசாரித்தாள் கீதா.

நீர் வழியும் கண்களுடன் நிர்மலா சொன்னுள்:

"இப்பொழுது அவன் மனைவி நீயல்ல கீதா!—சுமதி!"

அவ்வளவுதான்!—கீதாவின் தலையில் இடி விழவில்லை; இமய மலையே பெயர்ந்து வந்து விழுந்தது.

இந்தச் சமயத்தில்தான், "இவள் யார், அக்கா?" என்ற குரல் கீதாவின் காதில் விழுகிறது; திரும்பிப் பார்க்கிருள். அவள் அழகில் சொக்கிய ராஜா அங்கே நிற்கிருன்!

நிர்மலாவின் பாடு தர்ம சங்கடமாகப் போய்விடுகிறது. நிலைமையைச் சமாளிக்க, "அவள் வேலைக்காரி, ராஜா!" என்று சொல்லி விடுகிருள்.

அந்த அப்பாவி அத்துடன் அவளை விட்டானு?—அதுதான் இல்லை; தன்னை மனிதனுக்கிய சுமதியைக்கூட மறந்து கீதாவின்மேல் மையல் கொண்டு விட்டான் — பரிதாபம்!

இந்தக் காதல் பழமைப் பெண்ணுன கீதாவை மட்டும் சோதிக்கவில்லை; புதுமைப் பெண்ணுன சுமதியையும் சோதிக்கிறது; அன்புள்ளங் கொண்ட இருவருக்கும் இதனுல் எத்தனை துன்பங்கள்!

அப்பப்பா! அதற்குமேல் படித்துத்தானு தெரிந்து கொள்ள வேண்டும்?—பார்த்துத்தான் தெரிந்து கொள்ளுங்களேன்:

**"யார் வாழப் பிறந்தவள்?"**



**கோரஸ்**

ஆயிலகா . . . ஆயிலகா . . . ஆயிலகா, ஹையா
ஆயிலகா . . . ஆயிலகா . . . ஆயிலகா
நாடெல்லாம் வாழணும் நல்ல மழை பெய்யணும் —(,,)

மெய்யானஅன்பிலே ஒன்ருகிவாழுவோம்!
ஓ . . . . ஓ . . . . ஓ . . . . ஓ, . . . .
மெய்யானஅன்பிலே ஒன்ருகி வாழுவோம்
ஆ . . . . ஆ . . ,. ஆ . , . . ஆ . . . .
சாமி துணையாலே புவிமேலே தினமே
விழாக் கொண்டாடுவோம்! மனம் ஒன்ருகுவோம்!
மேலானவாழ்வு பெறுவோம்என்றுமே
எல்லோரும் கூடுங் தினமே இன்றுமே ! —(,,)

மேலானபெண்களே நாமென்றுசொல்லவே
சீராகவாழ்ந்திடவே வேணுமே!
சீராகவாழ்ந்திடவே வேணுமே!
ஆமாம் புவிமேலே சுகவாழ்வே பெறுவோம்!
மலர்பந்தாடுவோம் விழாக்கொண்டாடுவோம்!
பொன்ஞனநாளாம்இதுவே மண்ணிலே
எல்லோரும்கூடும்தினமே இன்றுமே! —(,,)

**கீதா**

சந்திரனைப் போலிருக்குமா?—மணம் நிறைந்த
செந்தாமரை போலிருக்குமா?
அத்தான் முகம்?—என் அத்தான் முகம்? (,,)
வந்தவுடன் நான் வாங்க என்பதா?
வாங்க என்பதா?—அல்லது
மறைந்து நின்று எட்டிப் பார்ப்பதா?
அத்தானை நான் - என் அத்தானை நான் —(,,)
சுகந்த மல்லி மலரைச் சூடவா? - அல்லது
கனகாம்பரம் நான் வைத்துக் கொள்ளவா?
முகத்துக்கு நான் பௌடர் பூசவா?—அல்லது
மஞ்சள் பூசி அலம்பிக் கொள்ளவா?
அவருக்கு இதிலே எது தான் பிடிக்குமோ?
அத்தானுக்கே - என் அத்தானுக்கே! —(,,)
அப்பா வரும் நேரமாச்சுதே! -- என்
அத்தானையும் அழைத்து வருவாரே! - இனி
எப்போதும் நான் சேர்ந்து வாழ்வேனே
அத்தானுடன், என் அத்தானுடன்! —(,,)

---



**மாணிக்கம்**

(தொகையரா)



சினிமாக் கலையை எளிதாக எண்ணி
சேரப் போனேன் நானடா
தெரிந்து கொண்டேன் அதுமிகவும்
சிரமமான தொழிலடா !

(பாட்டு)

அழகும் வேணும் திறமையும் வேணும்
அனுபவம் தான் வேணும்
அது இல்லாத ஆளைச் சினிமா
ஏற்காதொரு நாளும்-சினிமா
ஏற்காதொரு நாளும்

(தொகையரா)

வீட்டிலே கற்ற வித்தையை நானே
காட்டப் போனேன் சினிமாவிலே
ஆட்டாங் கல்லைப் போலவே அடித்தார் தலையை
மொட்டையே !

(பாட்டு)

தடியைப் பிடிக்கச் சொல்லி எந்தன் கையில் தந்தாரே — எந்தன்
கையில் தந்தாரே
விடியமட்டும் பாரா உஷார் சொல்ல வைத்தாரே—என்னைச்
சொல்ல வைத்தாரே !

(தொகையரா)

கலைஉலகசிற்பிகள் கைபட்டாலே விரைவிலே
கட்டாந்தரையும் மலையாக மாறும் காட்சிநடக்குது
அங்கையே!

(பாட்டு)

குமரிதனைக் கிழவியெனக் காட்டுங்கலை சினிமா
கிழவிதனைக் குமரியென மாற்றுங்கலை சினிமா
சினிமா....சினிமா....சினிமா....சினிமா
சினிமா....சினிமா....இதுதான்........சினிமா

---

## கீதா

தொகையரா

பெண்களின்துயரம் இந்தஉலகில், என்று மாறுமோ?
அந்தோ வாழ்வில், நொந்தே வாடுகின்றோமே!
நொந்தே வாடுகின்றோமே!

(பாட்டு)

பெண் ஜென்மம் போலவே—தாழ்ந்த
பிறவி வேறில்லையே—தாழ்ந்த
பிறவி வேறில்லையே! —(,,)

மண்ணிலேதுன்பம் அடையும்பெண்கள்
என்போலே இன்னும் எத்தனைபேரோ?
கொண்டார் கொடுத்தார் சண்டையினாலே
வாழ்நாள் எல்லாமுமே நொந்தே வீணாகினேன்! —(,,)

அறிவில்லை அழகில்லை ஆகையினாலே
ஆகாது இவளென்றால் ஆறிடும்மனமே
பணமில்லைஅதனால். வேண்டாமென்றாலே
பாவி உலகிலே பெண்என்னசெய்வாள்?
பெண் என்ன செய்வாள்? —(,,)

---





## சுமதி—ராஜா

**சுமதி** இன்பத்தாலே பொங்குதே என் இதயம் - என் இதயம்!

**ராஜா** துன்பந்தானே நீங்கி இன்பம் உதயம் – இனி உதயம்!

**சுமதி** காடுவெட்டி நிலம்திருத்தி கழனிஉழுத உழவன்போல்
களிப்பில்உள்ளம் பொங்குதே—இப்போ
களிப்பில் உள்ளம் பொங்குதே!
மலையிலிருந்துபாய்ந்து ஓடும்
மாநதி எங்கே செல்லுது?
மாநதி எங்கே செல்லுது?

**ராஜா** தொலைவிலுள்ள காதல னென்னும்
கடலை நாடிச் செல்லுது!
கடலை நாடிச் செல்லுது!

**சுமதி** வானநிலா தான் விரைந்து
யாரைத்தேடி செல்லுது?
யாரைத் தேடி செல்லுது?

**ராஜா** தாரகை யென்னும் காதலி தன்னை
காண விரைந்து செல்லுது!
காண விரைந்து செல்லுது!

**சுமதி** அசட்டு ராஜா கல்விமானுய்
ஆனதுஎவரின் திறமையால்?
ஆனதுஎவரின் திறமையால்?

**ராஜா** சுமதி என்னும் துஷ்டப் பெண்ணின்
சொந்தமுயற்சியின் திறமையால்!
சொந்தமுயற்சியின் திறமையால்!

---

## பிச்சைக்காரர்கள்

**ஆண்** வாழ்வினிலே............

பல மாறுதல்தான் வாழ்வினிலே நேர்ந்திடுதே!
நேர்ந்திடுதே!

**பெண்** ஓ...., ஓ..,, ஓ,...,

என்றும் பசிதான் மாருததோ?
இரந்து வாழுதல் மேலானதோ?

**ஆண்.** தந்தையை இழ்ந்து தாயையும் பிரிந்து
தரணியில் துன்பம் அடைந்து நாம் அலைகிறோம்

**இருவரும்.** பல மாறுதல் தான் வாழ்வினிலே நேர்ந்திடுதே
நேர்ந்திடுதே

**ஆண்.** பிச்சை எடுத்து அலைபவர்தான்—இந்த
பூமியில் சுகமாய் வாழ்ந்திடவே, வாழ்ந்திடவே

**பெண்,** தங்கது செய்திட மானிடர் தான்—எந்த
தலைமுறை தனிலே முயல் வாரோ?

**இருவரும்.** அண்ணல் மஹாத்மா வழி நடப்போம்—உலகம்
அநுதினம் மாறுது வழி பிறக்கும், வழிபிறக்கும்!
தன்னலங் கொண்டாரால் பிறர் அடையும்
துன்பம் தீர்ந்திடும் மெய்யாகவே!
பல மாறுதல் தான் வாழ்வினிலே நேர்ந்திடுதே
நேர்ந்திடுதே!

---





சுமதி

வாழ்வெனும் உயர் நிலா தேயுமோ மாறுமோ?–புவி
மானிடர் எனும் வானிடை யிருள் சூழ்ந்திடத் தானே! —(,,)

ஓ ,,,,.

அலை மோதிப் பாயுங் கடல் புயலாக மாறிடுமோ?
அமைதியில்லா மனநிலை போலே!
மயிலாடும் சோலை தனிலே மலைப் பாம்பு மேவுதல் போலே
மகிழ்வே மறைந்தே துயரே வருமோ?
மலை ஏறும் மானிடன் அடிவாரம் தன்னிலே
தளர்வடைந்தால் மலையிலே விரைந்தேற முடியுமோ?
கொடிப் போலே போகும் வழி வெகு தூரம் ஏகுமோ?
குறைவாகப் பாதியிலே தடைப்பட்டு நிற்குமோ?

———

**சுமதி**

இந்தியநாடு நம் இந்தியநாடு
எவரும்புகழும் உலகில் சிறந்த நன்னாடு —(,,)

அங்கம்பதினெட்டுஇதன் ராஜ்ய பாரம்
அழியாதசமதர்ம லட்சிய கீதம்
மங்காத புகழ்மணக்கும் காந்திய போதம்
மறவா உள்ளம் கொண்ட மானிடர் வாழும் —(,,)

கல்வியில்லா மனிதரில்லை என்று உயர்ந்தே
கற்றும்வேலை தேடிஅலையும் நிலைமை தகர்ந்தே
செல்வந்தனை மக்களுக்கே பொதுவினில் தந்தே
தேசம் தன்னை காக்கும் இளைஞர் தாயென விளங்கும்
சிறந்த —(,,)

இமயமுதல் குமரிவரை எல்லைவிரிந்தே
இந்தியாமுன் இருந்ததுபோல் மீண்டும் இணைந்தே
சமயச்சண்டை நீங்கிமனதில் பேதம் மறந்தே
சமத்துவமாய் வாழநினைக்கும் வீரர் நிறைந்த —(,,)





கீதா - ராஜா - சுமதி

**கீதா** வாழப்பிறந்தவள் நான் — உலகில்
வாடி வதங்கிடவோ ?
சூழ்ந்திடும் அன்பாலே — எனது
சுகத்தையும் இழந்தேனே ! —( ,, )

**ராஜா** காலம் முழுவதும் நான் — துயரால்
கலங்கி தவித்திடவோ ?
பாழும் மனம் தானே — என்னை
பாதக ஞக்கியதே !

**சுமதி** வாழப் பிறந்தவள் நான் எனது
வாழ்வை இழந்தேனே
ஆளன் மனம் மாற — என்ன
அநீதி இழைத்தேனே ?

**கீதா** இன்பத்தை வேண்டவில்லை — கொடுமை
யாருக்கும் செய்ததில்லை
துன்பம் அடைவதற்கே — உலகில்
தோன்றிய ஜென்மமோ நான் ?

**ராஜா** அன்பில் குறைந்தாளில்லை — சுமதி
அழகிலும் தாழ்ந்தாளில்லை
என்மனம் ஏனோதான் — வேறு
இடத்தையே நாடியது ?

**சுமதி** பெண்களுக்கே கணவன் — வாழ்வில்
பேசிடும் தெய்வமென்பார்
என் தெய்வம் எனை வெறுத்தால் — இனிநான்
ஏனோதான் வாழுவது ?

வாழப் பிறந்தவள் நான் — உலகில்
வாழ்வை இழந்தேனே

தமிழ் முழக்கம் அச்சகம், சென்னை — 14.


எமது அடுத்த வெளியீடு!
R.R.PICTURES
கூலி
ஆர்.ஆர் பிக்சர்ஸ்.
சென்னை...17.
ARULPERUNJOTHI PRESS. MADRAS-1